**வரையறுக்கப்பட்ட சீ – நோர் மன்றம்- 2018**

---------------------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------------

வரையறுக்கப்பட்ட சீ – நோர் மன்றத்தின் ("மன்றம்") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-------------------------------------------------------------------

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் முகவராண்மையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

-----------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல் லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சங்கம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 01 ஆம் இலக்கத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் மன்றத்திடமுள்ள ரூபா 73,136,262 பெறுமதியான காணியொன்று தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அக்குத்தகை காலம் 2018 யூலை 03 ஆந் திகதி முடிவடைந்தமையால் மீண்டும் வாடகை அடிப்படையில் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு அத்தனியார் கம்பனியால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை பயன்படுத்து வோரின் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கமளிக்கும் பொருண்மையான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 2 இன் 33 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 6,848,376 ஆன அசையாத இருப்புக்கள் மற்றும் ரூபா 1,593,044 தொகையான மெதுவாக நகரும் இருப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் இருப்புக்களின் தேறிய தீர்வையாகும் பெறுமதி தொடர்பாக புதிய மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் அதற்காக தேவையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலக்கம் 9 இன் 5.5 ஆம் பந்தியின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 26,294,662 ஆன கடன்பட்டோர் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் நீண்டகால கடன் பட்டோராக காணப்படும் மீதிகளுக்காக சேத நட்டங்களை இனங்கண்டு தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளப்பட்டு உண்மையான மீதிகளை |

| | | | |
|---|---|---|---|
| | | | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலக்கம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் மன்றத்தின் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான வியாபார பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட வேண்டும். |
| (உ) | இலக்கம் 16 இன் 6 மற்றும் 51 ஆம் பந்திகளின் பிரகாரம் தேசிய புத்தகப் பெறுமதி பூச்சியமான ரூபா 74,427,651 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக கணக்குகளில் தேவையான சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட:டு கணக்குகளில் தேவையான சீராக்கம் செய்யப்பட்டு உள்ளவாறான நிலைமை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலக்கம் 40 இன் 75 மற்றும் 79 ஆம் பந்திகளின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட சீநோர் ஓரியன்ட் பேல்ஸ் சீ புட் உணவகம் அமைந்துள்ள 2 ரூட், 12 பேர்ச் அளவிலான காணி மற்றும் 25,000 சதுர அடி அளவிலான மட்டக்குளிய படகு இறங்குதுறை களஞ்சியம் என்பன முறையே 1998 யூலை 04 ஆந் திகதி முதல் 20 வருடங்களுக்காகவும் 2017 பெப்ரவரி 08 ஆந் திகதி முதல் 05 ஆண்டுகளுக்காகவும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் தொடர்ந்தும் வருமானம் உழைக்கும் சொத்துக்கள் முதலீட்டு சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்திற்கு சொந்தமான ரூபா 1,300,000 தொகையான டிரக் மற்றும் டேலர் என்பன குத்தகை ஆதனங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | மன்றத்திற்கு சொந்தமான சொத்துக்கள் நிலையான சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 4 காணிகளில் வாடகை அடிப்படையில் பெறவேண்டிய ரூபா 179,360 தொகையான நிறுத்திவைத்தல் வரி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | பதில் வழங்கப்படவில்லை. | குத்தகை அடிப்படையில் கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் தொகை சரியாக கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | விற்பனை முற்பண பெறுவனவு, கடன்பட்டோர் பேரேட்டில் செலவில் பதிவு செய்த காரணத்தினால் கடன்பட்டோர் மீதி ரூபா 53,869,409 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | விற்பனை முற்பண பெறுவனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மத்துமகல காணியின் முதலீட்டு வருமானமாக ரூபா 2,700,000 என காண்பிக்கப்பட்ட போதும் அந்த ஆதனத்தின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | பதில் வழங்கப்படவில்லை. | முதலீட்டு வருமானம் கிடைக்கும் ஆதனங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.4 இணகங்காத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் | அண்மித்த அறிக்கைக ளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத் தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| திரட்டிய பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு | 108,738,261 | 103,948,761 | 4,789,500 | பதில் வழங்கப்பட வில்லை. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அண்மித்த அறிக்கைகளுக்கு இடையே பெறுமதிகள் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டிற்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| சிநோர் அவன்ஹலவி ருந்து கிடைக்க வேண்டிய மீதி | 1,025,796 | 1,364,594 | 338,797 | பதில் வழங்கப்பட வில்லை. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அண்மித்த அறிக்கைகளுக்கு இடையே பெறுமதிகள் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டிற்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வரிக்கு முன்னரான நட்டம் | 49,851,727 | 49,372,758 | 478,969 | பதில் வழங்கப்பட வில்லை. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அண்மித்த அறிக்கைகளுக்கு இடையே பெறுமதிகள் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டிற்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 19 ½ அடி படகுகள் 150 இற்காக மொத்த மதிப்பீட்டு உழைப்புக் கிரயம் ரூபா 3,465,000 ஆக இருந்த போதும் ரூபா 5,585,840 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் மதிப்பிடப்பட்ட எல்லையை விஞ்சி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,120,840 கொடுப்பனவிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | மதிப்பிடப்பட்ட எல்லையை விஞ்சிய கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

**1.5.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| விடயம் | | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | ஏனைய பெறவேண்டிய மீதி | 2,481,584 | நிலைத்திருதன்மையை உறுதிப்படுத்துவுதற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் | பதில் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பெற வேண்டிய மீதிகளின் நிலைதிருதன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிகக்ப்படவில்லை. |
| (ஆ) | ஏனைய செலுத்த வேண்டிய மீதி | 10,437,306 | நிலைத்திருதன்மையை உறுதிப்படுத்துவுதற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் | பதில் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பெற வேண்டிய மீதிகளின் நிலைதிருதன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிகக்ப்படவில்லை. |

## 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 முதல் 2017 வரை தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 8,037,027 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உதகியோகத்தர்கள் இனங் காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நீண்டகாலமாக தீர்வு செய்யப்படாத முற்பண மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உப ஒப்பந்த அடிப்படையில் மீன் வலைகளை உற்பத்தி செய்வதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,059,049 பெறுமதியான மூலப்பொருள் முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 149,274 பெறுமதியான மீன்பிடி வலைகள் மாத்திரமே நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த போதும் எஞ்சிய ரூபா 4,909,775 தொகை 2011 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | வலைகளை பெற்றுக்கொள்ள அல்லது உரிய முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கட்டிடங்கள் மற்றும் வளவினை பயன்படுத்துவதற்காக கடற்றொழில் அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,527,824 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கடற்றொழில் அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணம்

-------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 65,029,996 தொகையான கடன்பட்டோரிடமிருந்தும் ரூபா 53,712,377 தொகையான நேர் கடன்பட்டோரிடமிருந்தும் மீதிகளின் உறுதிப்படுத்தல் கோரப்பட்ட போதும் 2019 செப்தம்பர் 15 ஆந் திகதி வரை ரூபா 16,278,140 ஆன நேர் கடன்பட்டோரிடமிருந்தும் ரூபா 8,189,309 தொகையான இரண்டு கடன்பட்டோரிடமிருந்தும் மாத்திரம் மீதி உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருந்தன. மீதி உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு கடன்பட்டோரின் மீதிகள் நிறுவனத்தின் புத்தகங்களில் காணப்படும் மீதிகளுடன் ரூபா 10,212,612 ஆன வேறுபாடொன்று காணப்பட்ட போதும் அதற்குரிய காரணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க மன்றம் தவறியிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | கடன்பட்டோர் மீதிகள் சரியானதென உறுதிப் படுத்துவதற்கு மீதி உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் வேறுபாடுகள் காணப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்துவது தொடர்பாக கண்டறிந்து சரிசெய்யப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 131 ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை கம்பனிப் பதிவாளருக்கு 2019 செப்தம்பர் 04 ஆந் திகதி வரை அனுப்பியிருக்க வில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கம்பனிகள் சட்டத்தின் 131 ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை கம்பனிப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மன்றத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மாத்திரம் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு கைவிரலடையால இயந்திரத்தை பயன்படுத்தி இருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு கைவிரலடையால இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 1.8 நிதிய முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் ரூபா 29,764 ஆன இரண்டு செயற்பாடற்ற கணக்குகள் தொடர்பாக ஆராய்ந்து | பதில் வழங்கப்படவில்லை. | செயற்பாடற்ற இரண்டு கணக்குகள் தொடர்பாக பரீட்சித்து மூடிவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மூல ஆவணங்கள் இல்லாத 2018 யூலை மாதம் முதல் தீர்வு செய்யப்படாத ரூபா 791,775 கூட்டுத்தொகையான நேரடி காசு வைப்புக்கள் வங்கி இணக்க கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | வங்கி இணக்க கூற்றில் காணப்படும் நேரடி வைப்புக்கள் இனங்காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.9 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் சீராக்கப்பட்ட அடுத்த ஆண்டிற்கு எடுத்துச் செல்லப்படும் வியாபார நட்டம் ரூபா 4,148,578 கூடுதலாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | வரி கணிப்பீடு சரியாக கணக்கிடல் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் இடமளிக்கப்படாத வாடகை வருமானத்தின் மீது 25 சதவீதம் திருத்த வேவைகள் படிகளாக ரூபா 4,071,220 தொகை வாடகை வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | வரி கணிப்பீடு சரியாக கணக்கிடல் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த வரிக் காலப்பகுதிக்கு உரியதாக செலுத்த வேண்டிய் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 660,472 குறைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | வரி கணிப்பீடு சரியாக கணக்கிடல் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான கொடுக்கல் வாங்கல்களில் உருவாகியிருந்த ரூபா 1,458,293 ஆன பெறுமதி சேர் வரி மீது நிறுத்தி வைக்கப்பட்ட வரி (VAT WHT) மீதியை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை. | பதில் வழங்கப்படவில்லை. | 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான கொடுக்கல் வாங்கல்களில் உருவாகியிருந்த பெறுமதி சேர் வரி மீது நிறுத்தி வைக்கப்பட்ட வரியை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 4 ஆவது காலாண்டிற்குரிய ரூபா 446,700 ஆன பொருளாதார சேவைகள் கட்டணங்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பொருளாதார சேவைகள் கட்டணங்கள் செலுத்த வேண்டிய மீதியொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 56,366,471 ஆன நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 6,188,352 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 62,554,823 ஆன வீழ்ச்சியொன்று

அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விற்பனை கிரயம் 158 சதவீதத்தினால் அதாவது 124,463,754 ஆல் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

**2.2 விகிதப் பகுப்பாய்வு**

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் நடைமுறை சொத்து விகிதம் முறையே 1:2.19 மற்றும் 1:1.82 ஆக இருந்தது. நடப்பாண்டின் கையிருப்பு 31 சதவீதத்தினாலும் குறுங்கால வைப்புக்கள் 76 சதவீதத்தினாலும் குறைவடைந்தமை விகிதம் குறைவடைவதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் விரைவு விகிதம் முறையே 1:1.23 மற்றும் 1:1.14 ஆக இருந்தது. முன்னைய ஆண்டில் காணப்பட்ட குறுங்கால வைப்புக்கள் மற்றும் கேள்வி வைப்புக்கள் ரூபா 39.3 மில்லியன் மீளப் பெறல் விரைவு விகிததம் குறைவடைவதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் இணைப்பு விகிதம் முறையே 1:9.84 முதல் 1:10.11 வரை அதிகரித்திருந்தது. உரித்து மூலதனத்திற்கு ஒப்பாக கடன் மூலதனம் 14 சதவீதத்தினால் குறைவடைந்தமை அதற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேவைப்பாடு ஆய்வு செய்யப்படாமல் 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 8,637,804 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 13200 லீற்றர் அளவிலான எரிபொருள் பவுசர் படகுத்துறையின் தேவைக்காக பயன்படுத்தப்படாமல் 2012 திசெம்பர் 13 ஆந் திகதி | பதில் வழங்கப்படவில்லை. | தேவைப்பாட்டினை ஆய்வு செய்யப்பட்டதன் பின்னர் கூடிய வினைத்திறனை தரும் சொத்துக்கள் கொள்வனவு செய்வ தற்காக தேவையான கட்டுப்பாட்டு முறைமை கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

முதல் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் அந்த பவுசரை புரானவெல்ல மீன்பிடி துறைமுகத்திற்கும் மீண்டும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் வழங்கப்பட்டிருந்தது.

## 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை வாடிக்கையாளர்களின் கேள்வியை அடிப்படையாக கொண்டு எவ்வித ஒப்பந்தமொன்ம் மேற்கொள்ளாமல் ரூபா 25,035,238 ஆன மீன் பிடி உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்ட போதும் அவ்வாடிக்கையாளர்கள் அவற்றை கொள்வனவு செய்வதை நிராகரித்தமையால் விளைவற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக இருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | வாடிக்கையாளர்களின் கேள்வியை அடிப்படையாக கொண்டு உற்பத்தி செய்வதற்கு முன்னர் அதற்காக ஏற்படும் ஆபத்தினை குறைத்துக் கொள்வதற்கு தேவையான உடன்படிக்கை மேற்கொள்ளல் மற்றும் முற்பணத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சீ நோர் மன்றத்திற்கு | பதில் | சிற்றுண்டிச்சாலைக்காக |

| | | | |
|---|---|---|---|
| | சொந்தமான ரூபா 73 மில்லியன் பெறுமதியான காணி சிற்றுண்டிச் சாலைக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் போது குத்தகையாளரினால் ரீட் தடையுத்தரவொன்று பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமை காரணமாக அந்த ஆதனங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கும் முடியாமல் இருந்தது. | வழங்கப்படவில்லை. | குத்தகைக்கு வழங்கப்பட்ட காணியை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வழங்குனருடன் உடன்படிக்கை யொற்றுக்கு வராமல் ரூபா 1,376,413 செலவு செய்யப்பட்டு 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி பொருத்தப்பட்ட 58 கெமராக்களில் மட்டக்குளி படகுத்துறை 1 இல் பொருத்தப்பட்ட 14 கெமராக்களில் 7 கெமராக்கல் இயங்காமல் காணப்பட்ட போதும் வழங்குனருடன் உடன்படிக்கை யொன்று மேற்கொள்ளப் படாமையால் தேவையான பின்னைய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | நீண்டகால சேவைகளைகப் பெற்றுக் கொள்வதற்காக பணத்தை செலவிடுவதற்கு முன்னர் வழங்குனருடன் உடன்படிக்கை மேற்கொண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சீ நோர் மன்றம் மற்றும் தனியார் கம்பனியொன்றுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் 7(a) நிபந்தனையின் பிரகாரம் | பதில் வழங்கப்படவில்லை. | இரு தரப்பினரும் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் 7(a) நிபந்தனையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் வாகன திருத்த வேலைத்தளத்தில் அந்தந்த ஆண்டுகளின் விற்பனை புரள்வின் 3 சதவீதம் அல்லது குறைந்த வாடகையை அறவிடுவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2006 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான 13 ஆண்டு காலப்பகுதிக்காக மாதாந்த வாடகை கணக்கிடப்படாமல் ஆகக் குறைந்த வாடகை மாத்திரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | கணக்குகள் பரீட்சிக்கப்பட்டு பெற வேண்டிய மாதாந்த வாடகை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலவி வரும் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 666,000 பெறுமதியான படகு அச்சுக்கள் தொடர்பாக கைதவிர்ப்பு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த படகு அச்சுக்கள் தொடர்பாக கைதவிர்ப்பு செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 317,000 கொடுப்பனவு செய்து தனியார் நிறுவனமொன்று மூலம் தயாரிக்கப்பட்ட நிர்வாக செயற்பாட்டு கைநூலிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிர்வாக செயற்பாட்டு கைநூலிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு செயற்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 940,000 பெறுமதியான வேலைப் பட்டறை உபகரணம் (Lathe machine) உச்ச இயலளவில் பயன்படுத்து வதற்காக போதியளவு பதவியணியினர் இல்லாதிருக்கையில் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,658,705 செலவு செய்து அவ்வாறான இன்னுமொரு உபகரணமொன்று கொள்வனவு செய்யப்பட்டு எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்ற வகையில் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | அரசின் நிதி ஏற்பாடுகளை செலவு கொள்வனவு செய்த சொத்துக்களை பயன்படுத்தாமல் விளைவற்ற வகையில் களஞ்சியத்தில் வைத்திருந்தமைக்காக உரிய பொறுப்பு வாய்ந்தவர்களை இனங்கண்டு முறையான தொடர் நடவடிக்கையொன்று எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | படகு தயாரிக்கும் போது நொசல்களின் அளவினை பகுப்பாய்வு செய்வதற்கும் படகு தயாரிப்பிற்கு தேவையான வடிவமைப்பு செயற்பாடு களுக்காக பயன்படுத்துவதற்கு மன்றத்தினால் பரா மெரைன் மென்பொருளொன்று 2013 திசெம்பர் 16 ஆந் திகதி ரூபா 9,664,514 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அதனை பயன்பாட்டிற்கு எடுக்காமல் குறித்த சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 2.25 | பதில் வழங்கப்படவில்லை. | அரசின் நிதி ஏற்பாடுகளை செலவு செய்து கொள்வனவு செய்த சொத்துக்களை பயன்படுத்தாமல் விளைவற்ற வகையில் களஞ்சியத்தில் வைத்திருந்தமை மற்றும் மேலதிக செலவினங்களை மேற் கொண்டமை தொடர்பில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு தொடர் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மில்லின் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | யொன்று எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 5,395,137 இற்கு கொள்வனவு செய்யப்பட்டடிருந்த ஜெல்கோட் ஸ்பிரே கன் இயந்திரமும் 2013 மார்ச் 05 ஆந திகதி ரூபா 4,166,964 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பிளாஸ்மா இயந்திரமும் (Plasma Cutter Machine) எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | அரசின் நிதி ஏற்பாடுகள் செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்த சொத்துக்களை பயன்படுத்தாமல் விளைவற்ற வகையில் வைத்திருந்தமைக்கு உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | (i) | 2016 நவம்பர் 16 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட சீ–நோர் நிறுவனத்தினால் மூன்று பல நாள் மீன்பிடி படகுகளை தயாரிப்பதற்காக ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் 4(அ) பிரிவின் பிரகாரம் ரூபா 14,320,000 ஆன முற்பண தொகையொன்று ஒப்பந்தக் காரருக்கு வழங்கப்பட்டி ருந்தது. படகு தயாரித்து பூர்த்தி செய்து கையளிக்கப் படாதிருந்த போதும் ரூபா 14,320,000 வங்கி பிணைப் பொறுப்பினை நீடிக்கும் | பதில் வழங்கப்படவில்லை. | படகுகளை தயாரிப்பதற்கான வங்கி பிணைப் பொறுப்பின் காலத்தை நீடிப்பதற்கும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்திய முற்பணத்தை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது அதன் பெறுமதி ரூபா 3,705,000 வரை குறைக்கப்பட்டிருந்த போதும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட முற்பணம் எதனையும் அறவிடப்படாமல் இருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்து ஒப்படைத்திருக்க வில்லை. | | |
| (ii) | மேற்படி உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் 2017 மார்ச் 31 இல் கையளிக்கப்பட வேண்டிய படகுகள் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை கையளிக்கப்படாமை காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 7,416,000 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக்கட்டணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வரையறுக்கப்பட்ட சீ – நோர் நிறுவனம் ஒப்பந்தக்காரர் ஒருவர் மூலம் பல நாள் மீன்பிடி படகுகளை தயாரிக்கும் போது ஒரு படகிற்காக ரூபா 24,700,000 தொகையான உடன்படிக்கை தொகையை மிகைத்து அங்கீகாரமொன்று இல்லாமல் ரூபா 2,884,750 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட வில்லை. | உடன்படிக்கை தொகையை மிகைத்த கூடுதலான பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தனியார் தரப்பினரால் தயாரிக்கப்பட்ட 5 படகுகளுக்குரிய மதியுரைக் கட்டணங்களாக ரூபா 6,500,000 தொகை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் | பதில் வழங்கப்பட வில்லை. | படகு தயாரிப்பதற்கு தயாரிப்பாளரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

திணைக்களத்தினால் சீ-நோர் மன்றத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரை குறித்த படகு தயாரிக்கப்பட்டு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உற்பத்தியாளரை ஊக்குவிப்பதற்கு சீனோர் மன்றம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.6 ஏனைய அமைப்புக்களின் வளங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சிற்குரிய PB-8393 ஆம் இலக்க கெப் வண்டி, LY-0107 ஆம் இலக்க பிரைம் மூவர் வண்டி மற்றும் 50-4414 ஆம் இலக்க குரூ கெப் வண்டி என்பன மன்றத்தின் பயன்பாட்டிற்காக 2006 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டிருந்த போதும் அவற்றை மன்றத்திற்கு கையேற்பதற்கு அல்லது அமைச்சிற்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | பதில் வழங்கப்படவில்லை. | பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டுள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சிற்குரிய வாகனங்களை கையேற்பதற்கு அல்லது அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்தின் பொது முகாமையாளர் ஆட்சேர்ப்பு நேர்முக சபையினால் | பதில் வழங்கப்படவில் | ஆட்சேர்ப்பு நடைமுறையில் |

| | | |
|---|---|---|
| ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு இணங்க புள்ளிகள் வழங்காமையால் தகைமையுடையவர் நீக்கப்பட்டு தகைமையில்லாத ஒருவர் 2015 நவம்பர் 03 ஆந் திகதி நியமிக்கப்பட்டு அத்திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவருக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,684,660 தொகையும் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பாக ரூபா 144,398 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | லை. | குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு இணங்க புள்ளிகள் வழங்காமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 05 மாதங்கள் தாமதத்தின் பின்னர் அதாவது 2019 யூலை 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 4.2 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| சுற்றாடலுக்கு மிகவும் பாதகமான 10 தொன் அளவிற்கு அண்மித்த கழிவுப்பொருட்கள் முறையான அங்கீகாரமன்றி படகு துறையில் புதைக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | உரிய சுற்றாடல் அறிக்கைகள் மற்றும் முறையான அங்கீகாரத்துடன் சுற்றாடலுக்கு பாதகமான கழிவுப்பொருட்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |